**பஸ்பாகே கோரளை பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூன் 14 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தின் மீதி கணக்கின் பிரகாரம் ரூபா 12,696,019 ஆக இருந்த போதிலும் மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் அம்மீதி ரூபா 12,626,425 ஆக இருந்தமையால் ரூபா 69,594 ஆன வேறுபாடு கண்டறியப்பட்டது.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய 18 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 20,280,009 தொகையாக இருந்ததுடன், அதில் 5 வருடங்களிற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,673,480 ஆக இருந்தது. 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 17,402,623 ஆன மீதி மேலும் அறவிட வேண்டியிருந்தது.

**(ஆ) செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,003,296 கூட்டுத்தொகையான 06 செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் 1 முதல் 5 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,724,288 ஆக இருந்தது. இம்மீதியில் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 5,103,266 மீதி மேலும் அறவிட வேண்டியிருந்தது.

#### 1.3.3 கணக்காய்விற்கான தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 43,000 தொகையான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.3.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி<br>178(7)(1) மற்றும் (2) | 290,953 | முறையான டெண்டர் நடைமுறையொன்று பின்பற்றப்படாமல் 05 சந்தர்ப்பங்களின் போது டயர், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டன. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| (i) நிதிப் பிரமாணம் 571(3) | 49,075 | 2014 முதல் 2016 ஆம் ஆண்டு வரை 04 சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்த நிறுத்திவைத்தல்கள் தொகை மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. |
| (ii) நிதிப்பிரமாணம் 1653 | 52,250 | கெப் வண்டியொன்று 550 கி.மீ ஓடப்பட்டு 11 நாட்களுக்காக வாகனத்தை பயன்படுத்திய உத்தியோகத்தரால் ஓட்டக் குறிப்புக்களில் கையொப்பமிடப்பட்டு இருக்கவில்லை. |
| (இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை<br>2016 திசெம்பர் 29 ஆந் ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | சபைக்குச் சொந்தமான ஜீப் வண்டியொன்று 2013 நவம்பர் 21 ஆந் திகதியின் பின்னர் எரிபொருள் எரிவு பரீட்சிப்பு இடம்பெற்றிருக்கவில்லை. |
| (ஈ) ஏனைய சுற்றறிக்கை<br>2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/3 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 5(1) ஆம் பந்தி | | 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதிய மதிப்பீடொன்று மேற்கொண்டு புதிய உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் சில்வா லேண்ட் 15 கடைகளுக்காக 2008 ஆம் ஆண்டு முதல் உடன்படிக்கையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிவல்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,341,786 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,951,380 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 4,681,000 | 4,938,166 | 4,786,131 | 3,414,812 | 4,312,000 | 4,637,602 | 4,196,659 | 3,262,775 |
| (ii) | வாடகை | 4,245,000 | 2,276,529 | 2,156,125 | 276,042 | 5,063,000 | 1,722,536 | 1,638,663 | 138,804 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 855,300 | 854,857 | 749,357 | 435,100 | 855,800 | 723,650 | 663,650 | 329,600 |
| (iv) | ஏனைய வருமானம் | 18,439,000 | 11,423,196 | 10,469,435 | 10,992,080 | 12,808,400 | 16,426,656 | 21,907,042 | 5,400,000 |
| | மொத்தம் | 28,220,300 | 19,492,748 | 18,161,048 | 15,118,034 | 23,039,200 | 23,510,444 | 28,406,014 | 9,131,179 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

ஒட்டுமொத்த வருமான விடயங்களிலிருந்து 2016 திசெம்பர் 31 உள்ளவாறு நிலுவை ரூபா 9,131,179 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அப்பெறுமதி ரூபா 15,118,034 ஆக இருந்த காரணத்தினால் அந்நிலுவை வருமானங்களின் அதிகரிப்பு 65 சதவீதமாக இருந்தது.

#### 2.2.3 வீதவரியும் வரிகளும்

2017 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 496,473 ஆக இருந்ததுடன், 2017 திசெம்பர் வரை பட்டியலிடல் ரூபா 595,183 ஆக இருந்தது. இதில் 2017 திசெம்பர் மாதம் வரை முறையே ரூபா 131,907 மற்றும் ரூபா 364,069 மாத்திரமாக இருந்தது. அது சதவீதமாக 26 சதவீதம் மற்றும் 61 சதவீதமாக இருந்தது. 2017 திசெம்பர் இறுதி திகதி வரை நிலுவை ரூபா 595,681 ஆக இருந்தமையால் வருமான சேகரிப்பு பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

#### 2.2.4 கடை கூலி

(அ) சில்வா லேன்ட் பொதுக் காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 14 கடைகளிலிருந்து 2008 சனவரி 01 ஆந் திகதி முதல் 2011 மே மாதம் வரை ஆண்டொன்றிற்கு ரூபா 5,100 வீதம் அறவிடப்பட வேண்டிய வாடகை

ஒப்பந்தம் திருத்தம் செய்யப்படாமல் 2011 யூன் முதல் 2017 நவம்பர் மாதம் வரை குறைத்து அறவிடப்பட்டிருந்தது. இவ்வாறு வாடகை குறைவாக அறவிட்ட காரணத்தினால் அக்காலப்பகுதிக்குரிய மாத்திரம் ரூபா 296,068 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்தது.

(ஆ) சில்வா லேன்ட் பொதுக் காணியில் 15 ஆம் கடையிலிருந்து 2008 சனவரி மாதம் முதல் ரூபா 5,100 வீதம் அறவிடப்பட்ட வருடாந்த வாடகை 2012 ஆம் ஆண்டு முதல் ரூபா 5,600 வரை அதிகரித்திருந்த போதிலும் உடன்படிக்கை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) கடுகஞ்சேனயில் உள்ள கடைகள் 02 இலிருந்து 2014 ஆம் ஆண்டு முதல் 2017 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 60,500 ஆன நிலுவை வாடகையை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,999,627 உம் முத்திரைக் கட்டணம் ரூபா 5,000,000 ஆக இருந்தன. உம் அறவிடப்பட வேண்டியிருந்தன. 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் முழுவதும் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 574,850 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

**(அ) கலபட நீர்வீழ்ச்சி சுற்றுலா கவர்ச்சிகரமான இடமொன்றாக அபிவிருத்தி செய்தல்**

பஸ்பாக கோரளை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள கலபட நீர்வீழ்ச்சி சுற்றுலா கவர்ச்சிகரமான இனங்காணப்பட்டு மத்திய மாகாணத்தில் வர்த்தக, வாணிப மற்றும் சுற்றுலா திணைக்களம் ரூபா 3,449,470 ஆன நிதிஏற்பாட்டினை பயன்படுத்தி நீர் வீழ்ச்சி வரை நுழைவு வீதியொன்றை அமைத்து பார்வையாளர் இடமொன்றை நிர்மாணித்து சுற்றுலா கவர்ச்சிகரமான இடமொன்றாக அபிவிருத்தி செய்து அதனை பராமரித்து பேணிச் செல்வதற்காக பஸ்பாகே கோரளை பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த இடத்தை பார்வையிடுவதற்கு வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளிடமிருந்து கட்டணங்கள் அறவிடுவதற்காக உப விதிகள் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்படாமை, நீர் வீழ்ச்சிகள் பார்வையிடுவதற்காக பிரயாணம் செய்வதற்கு இருக்கும் வீதி 4.5 கி.மீ தூரத்திற்கு வாகனத்தை செலுத்துவதற்கு பொருத்தமான வகையில் அபிவிருத்தி செய்யப்படாமை மற்றும் சுற்றுலா பிரயாணிகளுக்காக போதியளவு நலன் வசதிகள் இல்லாமை போன்ற குறைபாடுகள் காணப்பட்டன.

**(ஆ) திண்மக்கழிவு பொருள் முகாமைத்துவம்**

மீளாய்வாண்டினுள் கழிவுப்பொருள் தொட்டி வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் வீட்டில் கொம்போஸ்ட் உற்பத்தி செய்யும் இயலுமை

பலவீனமாகவிருந்தது. இதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 50,000 பாதிடப்பட்ட தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

**(இ) செயற்படுத்தப்படாத இலக்குகள்**

ஆண்டின் இறுதியில் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்த காரணத்தினால் 03 செலவின விடயங்களுக்குரிய 03 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 2017 நவம்பர் மாதம் வரை அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்து அங்கீகாரம் கிடைத்தலில் தாமதம் காரணமாக அந்நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்த முடியாதிருந்தது.

**(ஈ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை அடையாமை**

நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தவதற்காக 15 செலவின விடயங்களுக்குரிய ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் 87 சதவீதமான ரூபா 678,241 தொகை நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(உ) நோக்கத்திற்கு முரணான செயற்பாடுகள்**

சபை முன்பள்ளிகளுக்கான பௌதீக வளங்களை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 50,000 தொகையில் நோக்கத்திற்கு உட்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் ரூபா 34,984 செலவு செய்து முன்பள்ளி காப்பாளர்களின் கலை வேலைகளினை மேம்படுத்தும் செயலமர்வு ஒன்று நடாத்தப்பட்டிருந்தது.

**3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்**

அ) விளையாட்டரங்கிற்கு மாத்திரம் பயன்படுத்தும் நோக்கில் 01 ஏக்கர் 1.08 பேர்ச் காணி 1964 இன் 28 ஆம் இலக்க காணி கையேற்றல் (திருத்தம்) சட்டத்தின் கீழ் உறுதிப்பத்திரமொன்று மூலம் 1977 ஒக்தோபர் 19 ஆந் திகதி கண்டி மாவட்ட காணி உத்தியோகத்தரால் பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட போதிலும், அந்நோக்கத்திற்கு முரணாக 2010 ஆம் ஆண்டின் போது அக்காணியில் புதிய சபை அலுவலக கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதற்குரிய கையளிப்பு கட்டளை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி சபை சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் திட்டங்களை அங்கீகரிப்பதற்காக முன்னைய 04 ஆண்டுகளில் கிடைத்திருந்த 515 விண்ணப்பங்களில் 434 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஏப்ரல் வரை இணக்கச் சான்றிதழ் 26 மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. இணக்கச் சான்றிதழ் வழங்குவதற்காக ரூபா 2,500 தொகை சபை அறவிட்ட போதிலும் 04 ஆண்டுகளில் வழங்கப்படாத 408 இணக்கச் சான்றிதழ்களுக்காக ரூபா 1,020,000 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

(அ) அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கைக்கு இடையே 19 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த தற்போது வேலை இடைநிறுத்தத்திற்குட்பட்டுள்ள வருமான பரிசோதகரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 83,220 ஆன கடன் மீதியொன்று 2000 ஆண்டிலிருந்து வேலை இடைநிறுத்தத்திற்கு உட்பட்டிருந்த முன்னால் செயலாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 32,227 ஆன கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

05 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதிய மதிப்பீடொன்று மேற்கொண்டு வாடகை அறவிடப்பட வேண்டிய போதிலும் சபையினால் 2009 ஆம் ஆண்டின் பின்னர் புதிய மதிப்பீடொன்று மேற்கொள்ளாமல் பழைய மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு 2017 ஆம் ஆண்டு வரை வீதவரி அறவிடப்பட்டு வந்தது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

2012 பெப்ரவரி 06 ஆந் திகதி அனர்த்த முகாமைத்துவ அமைச்சிலிருந்து நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 200,000 பெறுமதியான கொங்கிறீட் கலவை இயந்திரம் பொருளாதார நடவடிக்கையொன்றுக்காக பயன்படுத்தவதற்கு அல்லது மீளக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 2012 ஆம் ஆண்டு முதல் இயற்கை கழிவுக்குட்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

**3.5.2 விளைவற்ற / குறைப்பயனபாட்டிலான சொத்துக்கள்**

(அ) எல்வத்த மற்றும் மீபிட்டிய நீர் முன்மொழிவு திட்டங்களுக்காக 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,773,800 பெறுமதியான 362 நீர் மானிகள் உரிய நீர் முன்மொழிவு முறைமையில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 2018 ஏப்ரல் 04 ஆந் திகதி வரை விளைவற்ற வகையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 04 கணனி உபபாகங்கள் திருத்தி பயன்படுத்துவதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

(இ) நூலக கட்டிடம் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிலையத் திருத்தம் செய்யப்பட்டு ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.6 பெறுகை**

**பெறுகை திட்டம்**

ரூபா 9,615,526 ஆன மூலதனச் செலவினம் சபை செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி, மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன்

ஒப்பிடுகையில் 04 வருமான விடயங்களில் 45 சதவீதம் முதல் 77 சதவீதம் வரை மிகைத்தும் 06 செலவின விடபங்களில் 25 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது பிரதேச சபையின் செயலளரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) வருமான நிருவாகம் | i. நிலுவை வருமானம் அறவிடப்படாமை<br>ii. குத்தகை உடன்படிக்கை முறைப்படுத்தியமை |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | i விளைவற்ற மற்றும் குறைப்பயனபாட்டிலான சொத்துக்கள் காணப்பட்டமை<br>ii. உரித்தினை கையேற்பதிர் பலவீனங்கள் காணப்பட்டமை |
| (இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | i நீண்டகால கடன்பட்டோர் தீர்வு செய்யப்படாமை |
| (ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு | i மதிப்பிடப்பட்ட வருமானம் அறவிடப்படாமை.<br>ii. மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு செலவிடப்படாமை |